**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.54/2023**

Prosecution Witness : **LW - 1 / PW - 1**

Name : தமிழ்செல்வி Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day
21.11.2025

(எதிரி ஆஜர்)

முதல் விசாரணை

நான் ஆண்டிமடம் வட்டம் விளந்தை கிராமம், கிழக்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் தற்போது வீட்டுக்குடித்தனம் இருந்து வருகிறேன். நான் **B.E.,** முடித்துவிட்டு **M.B.A.,** படித்துள்ளேன். நான் **SC** வகுப்பைச் சார்ந்தவர். எனக்க கல்யாணம் ஆகிவிட்டது. என் கணவர் பெயர் பாலமுருகன். ஆஜர் எதிரி தான் என் கணவர். எங்களுக்கு விகான் என்ற பெயரில் 10 மாத ஒரு ஆண் குழந்தை உள்ளது. அந்த குழந்தை 07.02.2025 அன்று ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் பிறந்தது. நான் தற்பொழுது குடியிருக்கும் வீட்டில் நான், எனது கணவர், எனது குழந்தை ஆகியோர்கள் வசித்து வருகிறோம். நானும் எதிரியும் ஒருவரை ஒருவர் விரும்பி வீட்டிற்கு தெரிந்து, திருமணம் செய்துகொண்டோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது நான் கொடுத்த புகார் தான். அந்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. நாங்கள் இருவரும் சுமார் 10 வருடங்களாக காதலித்தோம். இருவரும் சென்னையில் பூந்தமல்லி பகுதியில் திருமணம் செய்துகொள்ளாமல் கணவன், மனைவியாக வாழ்ந்தோம். எங்கள் காதல் விஷயத்தை பாலமுருகன் அவர்களின் பெற்றோர்களிடம் சொன்னோம். அவர்கள் எந்த பதிலும் சொல்லாமல் பாலமுருகனுக்கு வேறு ஒரு பெண்ணுடன் திருமணத்திற்கு

ஏற்பாடு செய்தார்கள். நான் SC வகுப்பைச் சார்ந்தவர் என்பதால் சாதியை காரணம் காட்டி, வேறு ஒரு பெண்ணிற்கு திருமண ஏற்பாடு செய்தார்கள். நான் பாலமுருகனிடம் நாம் திருமணம் செய்து கொள்ளலாம் என்று சொன்னேன். அதற்கு அவர் எதுவும் சொல்லாமல் 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 27 ஆம் தேதி இரவு நேரத்தில் நாங்கள் தங்கியிருந்த சென்னை பூந்தமல்லி வீட்டின் காம்பௌன்ட் சுவர் ஏறி குதித்து வீட்டை விட்டு சென்றுவிட்டார். நான் அவரை தேடிப்பார்த்தேன். அவரது போனும் சுவிட் ஆஃப் ஆகியிருந்தது. பாலமுருகனின் அப்பா எங்கள் ஊர் நாட்டாமையிடம் நான் பாலமுருகனை விட்டு விலகியிருக்கும் படி சொல்லச்சொல்லி சொல்லியிருந்தார். அது என் அம்மாவிற்கு தெரிந்து என் அம்மா எனக்கு போன் செய்து என்னை வீட்டிற்கு வரச்சொன்னார். நான் சென்னையிலிருந்து வந்து நேராக ஆண்டிமடத்திலிருக்கும் பாலமுருகன் வீட்டிற்கு போனேன். அவர்கள் வீட்டை பூட்டிவிட்டு கதவை திறக்கவில்லை. அதன் பிறகு தான் நான் ஜெயங்கொண்டம் மகளிர் காவல் நிலையத்திற்கு போனேன். போலீசார் பாலமுருகனிடம் என்னை திருமணம் செய்து கொள்கிறாரா அல்லது ஜெயிலுக்குள்ளே போகிறாரா என்று கேட்டார்கள். அதற்கு அவர் ஜெயிலுக்கே போவதாக சொன்னார். நான் புகார் எழுதிக்கொடுத்தேன். அந்த புகார் ஜூலை 2023 ல் கொடுத்தது தான் அ.த.சா.ஆ.1 புகார் ஆகும். நான் அதன் பிறகு பாலமுருகனை ஜெயங்கொண்டம் ஜெயிலுக்கு சென்று பார்த்தேன். அவர் என்னை திருமணம் செய்து கொள்வதாக சொன்னார். எனவே, நான் அவரை பெயிலில் எடுத்தேன். 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் தேதி நானும் எதிரியும் ஜெயங்கொண்டம் சிவன் கோவிலில் திருமணம் செய்துகொண்டோம். பிறகு, சென்னைக்கு போய் நல்ல படியாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நான் கர்பமாக இருந்ததால் ஆண்டிமடத்திற்கு வந்தோம். தற்போது ஆண்டிமடத்தில் ஒரு வாடகை வீட்டில் தான் வசிக்கிறோம். தற்போதும் ஒரு சமயம் எங்களுக்குள் பிரச்சனை இருக்கிறது. இது சம்பந்தமாக DSP என்னை FIR போட்ட சமயத்தில் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களைத்தான் தற்போதும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சென்னையில் என் கணவர் மீது

எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் முதலாக ஜெயங்கொண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரில் என்னை போலீசார் ஒரு மாதம் வரை அவர் திருமணம் செய்துகொள்ளும் வரை விசாரித்தார்கள். நான் வேண்டுமென்றே புகாரை எதிரி மீது கொடுத்து தற்போது புதிய காரணங்களோடு முதல் விசாரணை சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.